# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண். 396/2012

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | மல்லிகா | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | ராஜேந்திரன் | தொழில் | .. | நெசவு |
| வயது | .. | 57 | ஜாதி | .. | செங்குந்தமுதலியார் |
| கிராமம் | .. | காடையாம்பட்டி | நாள் | .. | 03.03.2022 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திருமதி.மல்லிகா என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.3 – மல்லிகா - 2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

உங்களை இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க யார் அழைத்தார்கள் என்றால், சம்பத் என்பவர் அழைத்தார். சம்பத் உங்களுக்கு என்ன உறவுமுறை என்றால், அவருக்கும் எனக்கும் எந்த உறவுமுறையும் இல்லை. முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை உங்களிடம் யார் கூறினார்கள் என்றால், சம்பத்குமார் கூறினார். முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால், தெரியும். சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் கையெழுத்து செய்தபோது அதில் ஏதேனும் திருத்தங்கள் இருந்ததா என்றால், திருத்தங்கள் ஏதும் இல்லை. திருத்தங்கள் ஏதேனும் இருந்தால் அது எனக்குத் தெரியாமல் செய்யப்பட்டவை என்று சொன்னால், சரிதான். இந்த வழக்கின் வாதிகள் யார் யார் என்று சொன்னால், ஒருவர் சாமிநாதன் ஆவார், மற்றொருவர் சிதம்பரம் என்பவர் ஆவார். இந்த வழக்கின் பிரதிவாதிகளை தெரியும் என்று கூறியுள்ளீர்கள், அவர்களின் பெயர் தெரியுமா என்றால், மூர்த்தி மற்றும் செல்வம் பிரதிவாதிகள் ஆவார்கள். வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்து காலி இடமா அல்லது வீடா என்றால், வீடு ஆகும். எத்தனை வீடுகள் உள்ளன என்றால், கையோடு போட்ட ஒரே வீடுதான் உள்ளது. கதவு எண் தெரியுமா என்றால், தெரியாது. மின்சார இணைப்பு உள்ளதா என்றால், உள்ளது, இணைப்பு எண் தெரியாது. இன்றைய தினத்தில் அந்த வீட்டில் யாரேனும் குடியிருக்கிறார்களா என்றால், இல்லை. ஸ்ரீமதி என்பவர் தெரியுமா

என்றால், தெரியும். அவருடைய மகனுக்குத்தான் எனது மகளை திருமணம் செய்து கொடுத்துள்ளோம் என்றால், சரிதான். ஸ்ரீமதிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் உள்ளதா என்றால், உள்ளது. ஸ்ரீமதி எனக்கு சம்பந்தி முறை ஆகும் என்பதை முதல் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால், சரிதான். இந்த வழக்கில் ஸ்ரீமதி 3 ஆம் வாதியாக உள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியும். 3 ஆம் வாதி எனது சம்பந்தி என்பதால் இந்த வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. வீட்டின் நீள அகலம் தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்து மொத்தம் எத்தனை சதுரடிகள் என்றால், 2900 சதுரடிகள் ஆகும். அதில் கட்டிடம் எத்தனை சதுரடி, காலி இடம் எத்தனை சதுரடி என்ற விபரங்கள் உங்களுக்கத் தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்து ஆதியில் யாருக்குப் பாத்தியப்பட்டது என்ற விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால், சிதம்பரம், சாமிநாதன் என்பவர்களுக்குப் பாத்தியப்பட்டது. அதற்குண்டான ஆவணங்கள் ஏதேனும் பார்த்துள்ளீர்களா என்றால், அவர்கள் இரண்டு பேரும் வருவார்கள் போவார்கள். வழக்கு சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. எனது சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையில் வழக்கு சொத்து வல்லி இடும்ப முதலியாருக்குப்பாத்தியப்பட்டது என்று கூறியிருந்தால் அது தவறாகும். வல்லி இடும்ப முதலியார் யார் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. அவருக்கு எத்தனை மனைவிகள் என்ற விபரம் தெரியுமா என்றால், அவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி பெயர் தெரியுமா என்றால், தெரியாது. வல்லி இடும்ப முதலியாருக்கு முதல்மனைவி மூலம் வாரிசுகள் உள்ள விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியாது. சிதம்பரம் மற்றும் சாமிநாதன் ஆகியோர்கள் இரண்டாவது மனைவியின் வாரிசுகள் என்றால், சரிதான். சிதம்பரம் எப்போது இறந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால், சுமார் 20 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். சிதம்பரம் என்ன தொழில் செய்து வந்தார் என்றால், அதுகுறித்து எனக்குத் தெரியாது. சிதம்பரம் அவர் இறப்பதற்கு முன்பாக சுமார் 30 வருட காலமாக சங்ககிரி ICL இல் ஓட்டல் வைத்து நடத்திவந்தார் என்ற விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியும். வழக்கு சொத்தில் சிதம்பரத்திற்குண்டான பாத்தியத்தை பவுனம்மாள் என்பவருக்கு விற்றுவிட்டார் என்று சொன்னால், விற்றதாக எனக்குத் தெரியவில்லை. கடந்த 1995 ஆம் ஆண்டே சிதம்பரம் மற்றும் சம்பத்குமார் பவுனம்மாளுக்கு விற்றுவிட்டார்கள் என்றாலும், அதனால் சிதம்பரத்திற்கு வழக்கு சொத்தில் பாத்தியம்

உண்டு என்று நான் கூறுவது உண்மை அல்ல என்று சொன்னால், சரியல்ல. வல்லி இடும்ப முதலியாருக்கும் வழக்குசொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால், அவர் எனக்கு சிறிய வயதாக இருந்தபோதே அவர் இறந்துவிட்டார், அதனால் அதுகுறித்து எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சொத்தை சிதம்பரம் மற்றும் அவரது சகோதரர்கள் பராமரித்து வருகிறார்கள் என்று நான் கூறுவது தவறு என்றாலும், பிரதிவாதிகளிடம்தான் வழக்கு சொத்தானது உள்ளது என்று கூறினாலும், சரியல்ல. வழக்கு சொத்தானது பிரதிவாதிகளுக்கு முழு பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து குறித்து எந்த விபரமும் தெரியாததால்தான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும், அதனால் எனது சாட்சியம் முற்றிலும் நிராகரிக்கத்தக்கது என்றாலும், சரியல்ல.

ஒப்பம் / மல்லிகா

ஒப்பம் / திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.